முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved



# மாகாணக் கல்வித் திணைக்களம்
# ஊவா மாகாணம்
# பயிற்சிப் பரீட்சை – 2022

**மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022**

## வினாத்தாள் – I

**சுட்டெண் :.........................**

**நேரம் : 60 நிமிடங்கள்**

### பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தினுள் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக **ஒரு தாள்** வழங்கப்படும்.

### விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |


**இறுதிப் புள்ளிகள்**


| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டு உள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | V/ I / T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | V/ I / T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/ I / T / EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும். | V/ I / T / CH |


பக்.2ஐப் பார்க்க.

01). முதலில் வரையப்பட்டுள்ள சித்திரத்திற்கு பெருமளவிற்கு ஒத்ததாக வரையப்பட்டுள்ள சித்திரம் எது?





(1)


(2)



(3)

02). கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?






(1)


(2)


(3)

03). A, B ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை





(1) வேறுபாடுகளின் எண்ணிக்கை ஒன்றாகும்
(2) வேறுபாடுகளின் எண்ணிக்கை இரண்டு
(3) எந்தவித வேறுபாடுகளும் இல்லை

04). இந்த உருவைச் சரியாக பூர்த்தி செய்ய எந்த உருவத்துண்டை இணைக்க வேண்டும்





(1)


(2)



(3)

05). பின்வரும் உருவில் வெறுமையாக உள்ள பகுதியை நிரப்புவதற்குப் பொருத்தமான பகுதிகளைக் கொண்ட விடை எது?




(1) 

(2) 


(3) 

பக்.3ஐப் பார்க்க.

06). கோலத்திற்கேற்ப அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க.



..................................




(1) (2) (3)

07). கீழே தரப்பட்டுள்ளவற்றுள் இரண்டு ஒரு கூட்டத்திற்கும் மூன்று இன்னொரு கூட்டத்திற்கும் உரியனவாகும் இரண்டு என்ற கூட்டத்திற்கு பொருத்தமானவை எவை?

பல்லி, கரப்பான், பூனை, மாடு, எறும்பு

(1) பல்லி, எறும்பு
(2) பூனை, மாடு
(3) கரப்பான், பல்லி

08). எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.




(1) 4 (2) 5 (3) 6

09). ஒரு பாட்டனும் 2 அப்பாக்களும், 2 மகன்மார்களும் ஒரு பேரனும் ஒவ்வொரு கதிரையில் அமர்ந்திருந்தனர் எனின், அமர்ந்திருந்த ஆகக் குறைந்த கதிரைகளின் எண்ணிக்கை யாது?


(1) 5 கதிரைகள்
(2) 6 கதிரைகள்
(3) 3 கதிரைகள்

10). 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் திகதி செவ்வாய்கிழமை எனின், 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி என்ன கிழமையாகும்.

(1) வியாழக்கிழமை
(2) புதன்கிழமை
(3) செவ்வாய்க்கிழமை

11). நீளம், அகலம், உயரம் ஆகியன 10 cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 2cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 500
(2) 125
(3) 20

12). 

இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 9 (3) 11

13). சிறுவனொருவன் குறிப்பிட்ட சில ஆங்கில எழுத்துக்களை வெள்ளைக் கடதாசியில் எழுதிக் கொண்டு எழுத்தின் அழகை கண்ணாடியில் சென்று பார்த்தான். அப்போது அவன் எழுதிய எழுத்துக்களில் சில பிழை என எண்ணினான். அவ்வாறு அவன் எண்ணிய எழுத்துக்கள் எவை?

W S X
R P V A

(1) WAV (2) AXW (3) PRS

❍ கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

வண்ண வண்ண பிஞ்சு மலர் மொட்டு
மெல்ல மெல்ல தாமரை தடாகத்தில் மலர்வதைப் பார்
வான் நோக்கி ரோஜா செடி புன்னகைக்க
ஆவலாய் நிற்பதைப் பார்

14). வான் நோக்கி ரோஜாச் செடி புன்னகைக்க ஆவலாய் என்பதன் கருத்து

(1) வானத்தை ரோஜாச் செடி பார்க்கின்றது
(2) ஆகாயத்தை பாரத்து ரோஜா செடி சிரிக்கின்றது
(3) ரோஜா செடியில் பூ மலரப் போகின்றது

15). இப்பாடலின் மூலம் கூறப்படுவது நாளொன்றின் எப்பொழுதாகும்

(1) காலை வேளை
(2) மாலை வேளை
(3) இரவு வேளை

16). வயதுகள் படிப்படியாகக் கூடிச்செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடை.

(1) பெரியப்பா, சித்தப்பா, பாட்டன், அப்பா
(2) சித்தப்பா, அப்பா, பெரியப்பா, பாட்டன்
(3) பெரியப்பா, அப்பா சித்தப்பா, பாட்டன்

17). இலங்கையிலிருந்து உழைப்பவர் சிலர் வெளிநாடுகளில் வேலை செய்வது நல்லது என நினைப்பர். அங்கு சென்றதும் இங்கு ஏன் வந்தோம் என நினைப்பார்கள். அவ்வாறானவர்களுக்கு பொருத்தமான பழமொழி எது?

(1) விடாமுயற்சி பலன் தரும்
(2) இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை
(3) பொறுத்தார் பூமியாழ்வார்

பக்.5ஐப் பார்க்க.

18). பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | | 11 | 12 | 13 | 14 |
| 15 | | | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | * | * | * | * | * |

(1)

| | |
|---|---|
| | 10 |
| 16 | 17 |
| | 24 |

(2)

| | |
|---|---|
| | 10 |
| 15 | 16 |
| | 24 |

(3)

| | |
|---|---|
| | 10 |
| 17 | 16 |
| | 24 |

❍ பின்வரும் பந்தியின் படி, இலக்கம் 19, 20 ஆகிய வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிக.

பாடசாலை விழாவிற்கு அழைப்பிதழ்கள் கிடைத்தவர்கள் முதலில் மண்டபத்தில் அமர்ந்தனர். மாணவத் தலைவிகள் அவர்களுக்கு ஞாபகார்த்த இதழ்களை வழங்கினர், ஞாபகார்த்த இதழ்களை பெற்றுக் கொண்டவர்களுள் பழைய மாணவ மாணவிகளும் இருந்தனர்.


19). அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் மண்டபத்தில் இருக்கவில்லை. இக்கூற்று


(1) சரியானது
(2) பிழையானது
(3) கூறமுடியாது

20). இப்பாடசாலை ஒரு கலவன் பாடசாலையாகும். இக்கூற்று

(1) சரியானது
(2) பிழையானது
(3) கூறமுடியாது


21).



இவ் உருவினுள்  போல் எத்தனை உருக்கள் வெட்டி எடுக்கலாம்


(1) 4
(2) 7
(3) 8

22). A, B, C, D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகச் சிறிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண் யாது?




(1) 5312
(2) 5321
(3) 6789

23). இவ்வுரு ஒரு கம்பிச்சட்டகத்தை காட்டுகின்றது. எறும்பொன்று A யிலிருந்து B யினூடாக C வரை பயணித்தால் எறும்பு பயணித்த மொத்தத் தூரம்.





(1) 18 cm
(2) 16 cm
(3) 14 cm

24). வரிசை ஒன்றில் இரு ஆண்களுக்கு அடுத்து மூன்று பெண்கள் என்ற ஒழுங்கில் நிற்கின்றனர். வரிசையில் தொடக்கத்திலும் இறுதியிலும் ஆண்கள் நிற்கின்றனர் எனின். அவ்வரிசையில் மொத்தம் 42 பேர் நின்றால் அங்குள்ள பெண்களின் எண்ணிக்கை யாது?

(1) 18
(2) 24
(3) 21

25).



பின்வரும் உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி வெட்டி நீக்கப்படுகின்றது. வெட்டி நீக்கப்பட்ட பகுதியின் சுற்றிவர உள்ள நீளம் மீதமாக உள்ள பகுதியின் மொத்த நீளத்திலும்

(1) கூடுதலானது
(2) குறைவானது
(3) சமமானது


26). வினாடி வினாப் போட்டியொன்றில் 20 வினாக்கள் கேட்கப்பட்டன. சரியான (✓) விடை ஒன்றிற்கு 5 புள்ளிகள் வழங்கப்படும் என்பதும். பிழையான ( x ) விடைக்கு 2 புள்ளிகள் கழிக்கப்படும் என்பதுவுமே நிபந்தனையாகும். ஒரு மாணவன் இப்போட்டியில் 72 புள்ளிகள்பெற்றானாயின் சரியாகப் பதிலளித்த வினாக்கள்.

(1) 16
(2) 14
(3) 19

27). பேருந்து ஒன்று மணித்தியாலத்திற்கு 60 km வேகத்தில் பயணித்தால் A நகரிலிருந்து B நகரத்திற்கு செல்வதற்கு 2 மணித்தியாலங்கள் செல்லும் அப் பேருந்து மணித்தியாலத்திற்கு 30 km வேகத்தில் பயணிக்குமாயின் A நகரிலிருந்து B நகரிற்குச் செல்வதற்கு எடுக்கும் நேரம்.


(1) 4 மணித்தியாலங்கள்
(2) 1 மணித்தியாலம்
(3) 3 மணித்தியாலங்கள்

28). 999, 666, 79985 ஆகிய எண்களை இடமிருந்து வலமாகவும் 799, மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால் ஐந்தாவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் எண் யாது?



(1) 86
(2) 56
(3) 59

பக்.7ஐப் பார்க்க.

29). 

ஒரேயளவான சிறிய சதுரமுகிகள் சில இறாக்கை ஒன்றின் மீது அடுக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி இங்குள்ள சிறிய சதுரமுகிகளின் மொத்த எண்ணிக்கை.

(1) 13 (2) 15 (3) 17

பெட்டியினுள் தரப்பட்டுள்ள சொற்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 30ஆம், 31ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உலகத்திலிருந்து | - | A | நோய் | - | B |
| ஆட்டிப்படைத்து | - | C | கொரோனா | - | D |
| உலகை | - | E | நீங்குதல் | - | F |
| விட்டது | - | G | வேண்டும் | - | H |


30). சரியான வாக்கியத்தை தரும் சொற் கூட்டம் எது?

(1) DBECG
(2) DBACH
(3) HEBDG

31). நாம் செய்ய வேண்டிய பிரார்த்தனை எது?

(1) ADBHC
(2) DBACH
(3) DBAFH

32). A யிலிருந்து F வரை எழுத்துக்கள் குறிக்கப்பட்டுள்ள தாயக்கட்டை ஒன்றை இரு வேறு திசைகளிலிருந்து பார்க்கும் போது தென்படும் முறைகளைக் கீழுள்ள உருக்கள் காட்டுகின்றன.




அதன்படி F எனும் எழுத்தையுடைய முகத்தின் எதிர் முகம் காட்டும் எழுத்து.

(1) D (2) C (3) E


33). ஓர் உண்டியலில் ரூபாய் 5, ரூபாய் 2 நாணயக் குற்றிகள் மட்டும் உள்ளன. அவற்றின் பெறுமதி ரூபாய் 50 ஆயின் உண்டியலில் இருக்கத்தக்க ரூபாய் 2 நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை?


(1) 8 (2) 5 (3) 6


34). வனிதாவின் வயது 8 ஆகும். அவனது அண்ணாவின் வயது 12 ஆகும். அண்ணாவின் வயது எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் வனிதாவின் வயதைப் போன்று மூன்று மடங்காக காணப்பட்டது.

(1) 6 (2) 3 (3) 5

35). சிங்களவர், தமிழர், இலங்கையர், முஸ்லிம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை சரியாக காட்டும் விடை யாது?

(1) 

(2) 

(3) 

பக்.8ஐப் பார்க்க.

36). முளைவிடுமாம் சமுத்திரத்தின் அடி ஆழத்தில்
பூ மலருமாம் அதன் நீர் மேற்பரப்பில் இதழ்
விரியுமாம் நனைந்தே பனி மழையில் இது என்ன?
விடை தெரியாவிடின் இன்று போய் நாளை வா

(1) கடற்சங்கு (2) மாணிக்கம் (3) தாமரை

37). கீழே தரப்பட்டுள்ள தொடர்புகளில் இலக்கங்களுக்கு பதிலாக குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எல்லாக் குறியீடுகளுக்கும் 10 இற்கும் குறைவான எண் பெறுமானம் உண்டு.


● + ● = ✦

⌘ x ⌘ = ●

✦ - ⌘ = ⚐

அதன்படி மேலுள்ள குறியீடுகளை அவற்றின் பெறுமானம் கூடிச்செல்லும் ஒழுங்கிற்கு ஏற்ப நிரைப்படுத்தினால் கிடைக்கும் விடை.


(1) ● ⌘ ✦ ⚐ (2) ⌘ ● ⚐ ✦ (3) ⚐ ⌘ ● ✦

38). 


தரப்பட்டுள்ள படத்தில் முழு உருவின் பரப்பளவானது நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?

(1) இரண்டு
(2) மூன்று
(3) நான்கு

39). சதுர வடிவான கடதாசி ஒன்றை படத்தில் காட்டியவாறு மடித்த பின் அதில் அரை வட்டப்பகுதி வெட்டி நீக்கப்பட்டால், நீக்கிய பகுதியினுள் உள்ள அரை வட்டங்கள் எத்தனை?



(1) 4
(2) 6
(3) 8

40). 


ஒருவர் A என்ற இடத்திலிருந்து B என்ற இடத்திற்குச் சென்ற பாதையை உருவிலுள்ள வரிப்படம் காட்டுகின்றது. இதில் இவர் எத்தனை தடவைகள் முறையே வலது புறமும், இடது புறமும் திரும்பியுள்ளார்.

(1) 8, 3
(2) 7, 4
(3) 4, 7

முற்றும்

தரம் 1 தொடக்கம்
க.பொ.த உயர்தரம்
வரையான
வினாப்பத்திரங்களை
இலவசமாக
PDF
வடிவில் பெற
www.e-kalvi.com
இணையத்தளத்தை
அணுகவும்

முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved



ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம்

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# ஊவா மாகாணம்
# பயிற்சிப் பரீட்சை – 2022

ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம் ஊவா மாகாணம்

**மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022**

# வினாத்தாள் – II

**சுட்டெண் :.........................**

**நேரம் : 1மணி 15நிமிடம்**

## பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தினுள் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** ( சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.)
- விடைகள் எழுதப் பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம்** இடுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக **ஒரு தாள்** வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |

**இறுதிப் புள்ளிகள்**

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டு உள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | V/ II / T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | V/ II / T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/ II / T / EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும். | V/ II / T / CH |

பக்.2ஐப் பார்க்க.

**01). பின்வரும் பந்தியை வாசிக்க**

மரங்கள் அடர்ந்த ஒரு காடு இருந்தது. அந்த காட்டின் இடையே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் ஒரு பெரிய அரசமரம் நின்றது. ஆற்றிலிருந்து தொலைவில் நின்ற மரங்களுக்கெல்லாம் மழை பெய்யும் போதுதான் ஏராளமான நீர் கிடைக்கும். மற்றைய காலங்களில் அவை தரையில் மிக ஆழத்திற்கு தங்கள் வேரை நீட்டி, அங்குள்ள ஈரத்தைத்தான் இழுத்துக்கொள்ள வேண்டும்.

❍ **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i. பந்தியிலுள்ள பெயர் அடைமொழிச் சொல்லை எழுதுக. ....................................................

ii. **தூரத்தில்** என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்லை எழுதுக. ....................................................

iii. **ஆற்றிலிருந்து** என்பதைப் பிரித்து எழுதுக. ....................................................

iv. படர்க்கை பன்மைச் சொல் ஒன்றை எழுதுக. ....................................................

v. ஆற்றிலிருந்து தொலைவில் உள்ள மரங்களுக்கு எப்பொழுது ஏராளமான நீர் கிடைக்கும்

....................................................

vi. பந்தியிலுள்ள சினைப் பெயர் ஒன்றினை தெரிந்து எழுதுக. ....................................................

**02). அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

போகிறார்கள் / வருகின்றன / விளையாடுகின்றது / மேய்ந்தது

**03). தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

தண்டப்பணம் / இரவல் / பெற்ற / அறவிடப்படும் / புத்தகங்களை / உரியதினத்தில் / ஒப்படைக்காவிடின்

....................................................

**04). பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

அவர் ஒழுக்கத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் உரையாற்றினார்

**05). பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி ( ✓ ) எனவும் பிழையாயின் பிழை ( x ) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i. வானில் பறவைகள் அழகாகப் பறந்து செல்கின்றது. ( )

ii. மழைத்துளியும் சூரிய ஒளியும் வானவில் தோன்றுவதற்கு அவசியமாகின்றன. ( )

iii. வெளவால்கள் மர கிளைகளில் தொங்கியது. ( )

**06). 1. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக.**

விளையும் பயிரை .......................... தெரியும்

**2. பின்வரும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

....................................................

பக்.3ஐப் பார்க்க.

**07). பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. உயிரைப் பாதுகாப்பதற்காக மறைவிடங்களில் ( ஒழிந்திருந்தோம் / ஒளிந்திருந்தோம் )

ii. நேரத்திற்கு ( கடைமைகளைச் / கடமைகளைச் ) செய்தல் வேண்டும்.

**08). தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப்படுத்துக.**

**இடமிருந்து வலம்**
1) நாயகி என்பதன் பெண்பால் சொல்

**மேலிருந்து கீழ்**
1) நெல்லின் இளமைப் பெயர்
2) நாயின் ஆண்பால் மரபு

| | | | |
|---|---|---|---|
| 1. | | 2. | |
| | ■ | | |
| | ■ | | |
| ■ | ■ | | |

**09).** 1) பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.

பறவைகள் தோட்டத்திற்கு வந்தன. ..........................................................................................

2) சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) செய்திகளைச் திரட்டித் தருபவர் ( நிருபர் / பத்திரிகையாளர் )

(2) உற்றார் உறவினர் என்பது ( இரட்டைக்கிளவி / இணைமொழி ) ஆகும்

**10).** 1) பின்வரும் வாக்கியத்தை எழுத்து மொழியில் எழுதுக.

நான் கணனியில் பயிற்ச்சி செய்தேன். ..........................................................................................

2) ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக எழுதுக.

குதிரை மிக வேகமாக ஓடியது. ..........................................................................................

**11). தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

i. Moon .................................................... ii. Friend ....................................................

**12). தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.**

i.



ii.



............................................................ ............................................................

**13). கிழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

i. These ........................................... ( is / are ) animals.

ii. They ........................................... ( like / likes ) their classroom

**14). சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i. වෙලාව කීයද? :......................................................................................................

ii. පුස්තකාලය :......................................................................................................

**15). பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.**

i. சந்தை :............................................. ii. திங்கட் கிழமை :.................................................

**16).** (1) ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது இற்கு முந்திய, பிந்திய எண்களை எழுதுக.

i. முந்திய எண் ........................ ii. பிந்திய எண் ...........................

(2) 7, 5, 3, 0 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச்சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசத்தை எழுத்தில் எழுதுக.

.....................................................................

**17).** (1) பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

7895, 6238, 3078, 9632 ..........................................................................................................

(2) பின்வரும் உரோமன் எண்களை இறங்குவரிசைப்படுத்தி எழுதுக.

viii, xix, xv , xvii ..........................................................................................................

**18).** தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண் கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

(1) 1112, 1108, 1104, 1100, ...................

(2) 5, 9, 10, 18, 15, 27, .......................

**19).** கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| திண்மம் | முகம் | உச்சி | விளிம்பு |
|---|---|---|---|
| கனவுரு | | | |
| நான்முகி | | | |

**20).** ஒரு பீப்பாயில் 50l தேங்காய் எண்ணை இருந்தது. வாரத்தில் தேங்காய் எண்ணையை விற்ற பின்னர் எஞ்சியிருந்த அளவு 7l 500ml ஆகும். வாரத்தின் போது விற்கப்பட்டுள்ள தேங்காய் எண்ணையின் அளவு யாது?

.......................................................

**21).** எண்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.

| | |
|---|---|
| 156 | 224 |
| 1027 | |
| 3206 | 517 |

(1). கூட்டுத்தொகையாக 3586 கிடைக்கும் மூன்று எண்களையும் எழுதுக.

.......................................................

(2). இங்குள்ள மிகப்பெரிய எண்ணிலிருந்து மிகச்சிறிய எண்ணை கழித்தால் கிடைக்கும் விடை யாது?

.......................................................

**22).** ஓர் உடற்பயிற்சிக் காட்சியில் மாணவர்களுக்கு ஒரு மாணவனுக்கு நான்கு வீதம் 872 பலூன்கள் விநியோகிக்கப்பட்டன. இவ்வுடற்பயிற்சிக் காட்சியில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................

**23).** (1). பின்வரும் உருவிற்கு சமச்சீர் அச்சினை வரைக.




(2). 4kg 250g பருப்பிலிருந்து எத்தனை 250g பருப்புப் பைக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?

..........................................

**24).** கொவிட் தடுப்பூசி முகாம் ஒன்று 3 மணித்தியாலங்கள் 15 நிமிடங்கள் இடம்பெற்றது. இம்முகாம் பி.ப 2.10 நிறைவடைந்தது எனின் கொவிட் தடுப்பூசி முகாம் ஆரம்பித்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................... ....................

**25).** (1). பின்வரும் உருவில் $\frac{2}{5}$ ஐ பென்சிலால் நிழற்றுக.



(2). நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக. ........................

**26).** (1). 64 தேங்காய்களில் $\frac{3}{4}$ பங்கு விற்பனை செய்த பின்னர் எஞ்சியுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

................................

(2). நகரம் x இலிருந்து நகரம் y வரையுள்ள தூரம் 7km 200m ஆகும். நகரம் y இலிருந்து z வரையுள்ள தூரம் 4 km 300 m ஆகும். நகரம் x இலிருந்து நகரம் y இனூடாக நகரம் z வரை உள்ள மொத்தத் தூரம் யாது?

...............km ..........m

**27).** பின்வரும் விலைப்பட்டியலை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

| விலைப்பட்டியல் | | | |
|---|---|---|---|
| பால்மா பைக்கற்று | 1 | = | ரூ 475.00 |
| சீனி | 1 kg | = | ரூ 140.00 |
| பருப்பு | 1 kg | = | ரூ 160.00 |
| சவர்க்காரக்கட்டி | 1 | = | ரூ 62.00 |

(1). கமலன் 2 kg பருப்பு 4 சவர்க்காரக்கட்டிகளும் வாங்கினான். அவன் செலுத்திய பணம் எவ்வளவு?

ரூபாய் ........................................

(2). அருண் பால்மா பைக்கற்று 2ம், 2kg 500g சீனியும் வாங்கிக் கொண்டு ரூபாய் 5000ஐ கடை உரிமையாளருக்கு கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?


ரூபாய் ..........................................

**28).** தனுஷ் குறிப்பிட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி 30m தூரம் நடந்து. அங்கிருந்து கிழக்கு நோக்கி 30m தூரம் சென்றான். தற்போது தனுஷ் ஆரம்பத்தில் நின்ற திசைக்கு எத்திசையில் நிற்கின்றான்.

..........................................

**பக்.6ஐப் பார்க்க.**

**29).** வாரமொன்றில் பாடசாலைக்கு வருகை தந்த தரம் 5 மாணவர்களின் விபரம் கீழே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.




(1). செவ்வாய்க்கிழமை பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களை விட வியாழக்கிழமை 4 மாணவர்கள் குறைவாக வந்தனர். வியாழக்கிழமை வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக் காட்டுக.

(2). வாரத்தில் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

....................................................

❖ **30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30). பிரித்தானியர்களால் இலங்கை முழுமையாகப் கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
(1) 1796 (2) 1815 (3) 1658

31) கால வேறுபாடின்றி பூப்பூக்கும் தாவரங்களாக **அமையாதது**.
(1) வாழை (2) செவ்வரத்தை (3) விளா

32) பனிகட்டியை உருகாது நீண்டகாலம் பேணுவதற்கு செய்யும் முறையில் **அடங்காதது.**
(1) மேலே மரத்தூளைப் பரவி மூடி வைத்தல்
(2) ரெஜிபோம் பெட்டியில் இட்டு மூடி வைத்தல்
(3) பனிகட்டியை நீரில் இட்டு மூடி வைத்தல்

33) கால்கள் அற்ற விலங்குகள் மாத்திரம் இடம்பெறும் விடை எது?
(1) மரஅட்டை, மண்புழு (2) அட்டை, பாம்பு (3) அட்டை, மரவட்டை

34) நாம் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தும் பொருட்களாக கொள்ளக்கூடியது.
(1) கணினி, வானொலி
(2) முகக்கவசம், கைக்குட்டை
(3) பற்தூரிகை, பற்பசை

35) நீரில் கரையும் பொருள் **அல்லாதது** எது?
(1) மெழுகு, கிறிஸ் (2) உப்பு, மஞ்சள் (3) டீசல், சீனி

36) வெந்நீர்க் கேத்தல் புரண்டு எரிகாயம் ஏற்பட்டால் **செய்யத்தகாதது.**
(1) களிம்புகள் பூசுதல்
(2) எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் வழிந்து செல்லுமாறு தண்ணீரை ஊற்றுதல்
(3) விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல்

37) பற்சில்லும் சங்கிலியும் கொண்ட வாகனங்கள்
(1) மோட்டர்சைக்கிள், மிதி வண்டி
(2) மிதிவண்டி, வான்
(3) மிதிவண்டி, கார்

**பக்.7ஐப் பார்க்க.**

38) தற்காலத்தில் நீரைச் சுத்திகரிக்கும் முறையாக அமைவது.
(1) கரியை நீரில் இடுதல்
(2) கொதிக்க வைத்து ஆறவிடுதல்
(3) வடிகட்டியைப் பயன்படுத்தல்

39) நாற்று மேடை அமைப்பதற்கு எமக்குத் தேவையானது
(1) களிமண், மணல், சேதனப் பசளை
(2) மண், மணல், நன்கு உக்கிய கூட்டெரு
(3) கூட்டெரு, பஞ்சு, ஈர சாக்கு

40) பண்டையக்காலத்திலும், பாடசாலையிலும், தற்காலத்திலும் பயன்படுத்தும் தகவல்களை பரிமாற்றிக் கொள்ளும் முறைகள் முறையாக அமைந்த விடை
(1) சேனைப்பாட்டு, கூட்டங்கள், அறிவித்தல்
(2) சுவரொட்டி, முரசறைதல், ஒலிபெருக்கி மூலம்
(3) தூதுவர் மூலம், தொலைக்காட்சி, அறிவித்தல்

41) கிராமங்களிலிருந்து மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருந்துச்சாலை ஒன்றினை தாபித்தவர் யார்?
(1) வண. எஸ் மஹிந்த தேரர்
(2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
(3) அனாகரிக தர்மபால

42) இலங்கையில் முதலாவது தேயிலைச் செடி நாட்டப்பட்ட இடம்.
(1) மன்னார் (2) லூல்கந்துர (3) ஓப்பநாயக்க

43) “எனது உள்ளத்தின் அமைதியை எனது நண்பர்களும் உணரட்டும், எமது வீட்டாரும் உணரட்டும்” என்பது உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டில் எப்படிமுறையாகும்?
(1) உள்ளத்தை தளர்த்துதல் (2) திடசித்தம் (3) பிரார்த்தனை

44) பின்வரும் இடங்களில் உலக மரபுரிமை எனப் **பெயரிடப்படாதது** எது?
(1) சிகிரியா, சிங்கராசவனம்
(2) தலதாமாளிகை, மகாபோதிவிருட்சம்
(3) யால சரணாலயம், பேராதனை பூங்கா

45) எமக்கு பொது சேவைகளை வழங்கும் நபராக **அமையாதது?**
(1) கிராம அதிகாரி (2) விவசாய ஆலோசகர் (3) மீனவர்கள்

46) முதிர்ந்த வெண்டிக்காய், காசித்தும்பை, மஞ்சாடி ஆகிய வித்துக்கள் பரம்பலடையும் முறை
(1) காற்றின் மூலம் (2) வெடித்தல் மூலம் (3) விலங்கின் மூலம்


47) இலங்கைக்கே உரித்தான தாவரமாக **அமையாதது**
(1) எண்ணை, ஹீன் போவிட்டியா
(2) தேயிலை, இறப்பர்
(3) கெக்கட்டியா, கொடபறை

48) இலங்கைக்கு உரித்தான மூலையூட்டியும், நகருயிரும், மீனும் முறையே அமைந்த விடை
(1) சபன்கோழி, மள்புளுட்டா, கலவத்தன்
(2) சுண்டெலி, நீர்ப்பாம்பு, புலத்ஹய்யா
(3) கொம்பு ஓணான், மரநாய், மள்புளுட்டா

49) இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோயாக அமைவது.
(1) இரப்பையழற்சி (2) நீரிழிவு (3) உயர் குருதியமுக்கம்

பக்.8ஐப் பார்க்க.

50) பின்வரும் உருவின் பெயர்



(1) தலையணை உறை
(2) தையல் ஊசி தாங்கி
(3) விசேட பை

51) பொத்திகளை உண்டாக்கும் தாவரங்கள் எவை?
(1) எண்ணை, சோளம் (2) வாழை, சோளம் (3) வாழை, வெண்டி


52) பின்வரும் தையல் முறைகளுள் அடிப்படைத் தையல் வகைக்குள் **அடங்காதது**
(1) விஸ்பம் தையல் (2) சோம் தையல் (3) மீன் முள்ளுத் தையல்

53) வாகனங்களில் பயணம் செய்யும் போது **செய்யக்கூடாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) இருக்கைகளில் அமர்ந்து செல்லல்
(2) தலை,கை போன்ற உடற்பகுதிகளை வெளியே நீட்டுதல்
(3) தொலைபேசியில் பேசிக் கொண்டு செல்லல்

54) மின்குமிழ் ஒன்றை ஒளிரச் செய்வதற்கு அவசியமான இலத்திரனியல் கட்டமைப்பினை பூரணப்படுத்துவதற்கு ஆளியாக பயன்படுத்தக்கூடிய ஒரு பொருள்.
(1) உலோகக் காகிதக் கவ்வி
(2) காட்போட் துண்டு
(3) மூங்கில் துண்டு

55) அவசர விபத்துக்களின் போது இலவசமாகக் கிடைக்கும் நோயாளர்காவு வண்டியின் சேவையை பெற்றுக் கொள்ள அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்?
(1) 1919 (2) 1990 (3) 1918

56) அருகே தரப்பட்டுள்ள படம் காட்டுவது.
(1) நீர் சுழலி
(2) நீர் வடிகட்டி
(3) நீர் சக்கரம்




57) கொவிட் 19 இலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள செய்ய வேண்டியது.
(1) தொடர்ச்சியாக விற்றமின் C மாத்திரை உட்கொள்ளல்.
(2) கட்டாயம் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை பேண வேண்டும்.
(3) தடுப்பூசிகளை ஏற்றி விரும்பியவாறு நடமாடுதல்.

58) நிலக்கடலை, மாஜரீன், இறைச்சி ஆகியவற்றில் அடங்கியுள்ள போசணைக்கூறு.
(1) கொழுப்பு (2) புரதம் (3) காபோவைதரேற்று

59) படத்தில் காட்டப்படுவது,



(1) பலாப்பொத்தி அலங்காரம்
(2) பூவும் மொட்டும் அலங்காரம்
(3) இரட்டைச்சுழி அலங்காரம்

60) "இயற்கை எழில்மிக்க எமது நாடு" எனும் தலைப்பில் மூன்றுவாக்கியங்கள் எழுதுக.
( ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமலும் எழுவாய், பயனிலைத் தொடரும் சரியான எழுத்துக்கூட்டலுடனும் அமைந்திருத்தல் வேண்டும் )

..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

முற்றும்